II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 14 of 2024**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 19.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : சீனிவாசன் | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் பாகபிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல்செய்திருக்கிறேன். வழக்கு சொத்து என் அப்பாவிற்கு அவரது தந்தை வழியில் உரிமையானது. என் பாட்டனார் சொத்து என்பதற்கு பட்டா கொடுத்துள்ளேன். அந்த பட்டா என் அப்பா பெயரில் உள்ளது. என் பாட்டனார் சொத்து என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா பெயரில் உள்ள பட்டா கிராம நத்தம் பட்டா என்றால் சரிதான். அது அனுபவத்தின் அடிப்படையில் அரசாங்கத்தால் வழங்கப்படுவது என்றால் சரிதான். என் அப்பாவின் அனுபவத்தின் அடிப்படையில் தான் எங்களுக்கும் அனுபவம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் கிழக்கே 24 அடி, மேற்கே 30 அடியாகும். நீளம் 230 அடி இருக்கும். வழக்கு சொத்தில் தான் எனது பெற்றோரும், நானும் பிரதிவாதியும் வீடு கட்டி வசித்து வந்தோம் என்றால் சரிதான். மேற்கு பக்கமாக வீடு கட்டியுள்ளோம். மீதி இடம் காலியாக உள்ளது. 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு என் தந்தை தான் திருமணம் செய்து வைத்தார் என்றால், ஒரு தங்கைக்கு நான் திருமணம் செய்து வைத்தேன். மற்ற

இருவருக்கும் என் தந்தை திருமணம் செய்து வைத்தார். நானும், பிரதிவாதியும் நாங்களாகவே திருமணம் செய்து கொண்டோம். நான் வழக்கு சொத்தில் இருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பு என் குழந்தைகள் படிப்பதற்காக வெளியே வந்தேன். அதன் பிறகும் என் பெற்றோரை போய் பார்த்து பணம் கொடுத்துவிட்டு வருவேன். அங்கு என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியும். என் தந்தை உயிருடன் இருந்த போதே என் தம்பியை தான் வசிக்கும் வீட்டிற்கு பின்புறம் வீடு கட்டிக்கொள்ள சொன்னார் என்றால் சிறியதாக வீடு கட்டிக்கொள்ள சொன்னார். அதற்கு என் தந்தையும் சேர்ந்து என் சகோதரரோடு கடன் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா சொன்ன இடத்தில் தான் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். என் தந்தை 2022 ல் காலமானார். அதற்கு முன்பாக என் தம்பி வீடு கட்டி முடித்துவிட்டார். வழக்கு தொடர்ந்த பிறகு அதற்கு மேல் இரண்டு மாடி கட்டியுள்ளார். என் தந்தை என்னிடம் வீடு கட்டிக்கொள்ள சொல்லவில்லை.  எனது சகோதரி பத்மாவதியும் பின்புறம் வீடு கட்டிக்கொள்ள சொன்னார். என் தாயார் பழைய வீட்டிலேயே இருக்கிறார். அவருடைய காலம் வரை அவர் அங்கு வசிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. என் தந்தை உயிருடன் இருந்த போதே அவர் இருந்த வீட்டை எனக்கும், அதற்கு பின்புறம் 1ம் பிரதிவாதிக்கும், அதற்கு பின்புறம் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் வீடு கட்டிக்கொள்ள சொல்லி வாய் மொழியாக பாகபிரிவினை செய்து விட்டார் என்றால் சரியல்ல. என் தந்தை வாய்மொழி பாகபிரிவினை செய்ததன் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என் தம்பி வீடு கட்டியுள்ள இடத்தை தவிர்த்து  வேறு பகுதியை ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் இந்த வழக்கை வழக்கு சொத்தில் 1/6 பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தைக்கு நான் மற்றும் பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு சம உரிமை உள்ளது போல் அனைத்து பிரதிவாதிகளுக்கும் சம உரிமை உள்ளது என்றால் சரிதான். 3, 4, 5 பிரதிவாதிகள் நீதிமன்ற கட்டணம் செலுத்தி தங்களுக்கும் பாகம் ஒதுக்குமாறு கோரியுள்ளனர் என்றால் சரிதான். எனக்கு பாகம் ஒதுக்குவதுபோல் மற்ற பிரிவாதிகளுக்கும் பாகம் ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.